மன்றப் பதிவேட்டிலே பதிந்து** கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக் களைச் சொல்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

10-30 மணி.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, நகர்ப்புற வளர்ச்சி என்ற இரண்டு மானியக் கோரிக்கைகள்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக ஒருசில கருத்துக்களை இங்கே முன் வைக்க விரும்புகிறேன். 30 இலட்சம் பேர் இந்தத் தொழிலை நம்பி வாழக்கூடிய நிலைமை இருக்கிறதென்ற அடிப்படையிலே இந்தத் தொழிலுக்கு இந்த அரசு அதிகமான ஊக்கத்தைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு வந்திருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். தள்ளுபடி காலத்தை 90 நாட் களாக நீடித்திருப்பதும், அதற்கு 27 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதும், அதைப்போல நெசவாளர்களுக்குக் காப்புறுதித் தொகை 3,000-லிருந்து 10,000ஆக உயர்த்தப்பட்டு இருப்பதும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றுதான். அதுமட்டு மல்ல. 5 கோடி ரூபாய் செலவில் 2,000 நெசவாளர்களுக்கு தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டித்தர திட்டமிட் டிருப்பதும் நல்லதுதான். இது யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவது போல இருக்கிறது. கிட்டத்தட்ட 4 லட்சத்து 27 ஆயிரம் தறிகள் இருக்கும்போது 2,000 தறிக் கூடங்கள் கொண்ட வீடுகள் என்பதை இன்னும் அதிகமாகக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

7. அறிவிப்பு.

அவை நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அமைச்சர்களிடம் உறுப் பினர்கள் சென்று பேசுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஓர் அறிவிப்பு. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்ப்பது என்றால் அவர்களுக்கு என்று தனி அறைகள் இருக் கின்றன. துறைகளும் இருக்கின்றன. தேவைப்படுகிற போது அவர்களை அறைகளிலேயே சந்திப்பதற்கு வாய்ப்பு இருக்கும்போது, இப்படி அவையிலே ஒருவர் பேச எழுந்த வுடன், இது ஒரு "Zero hour" போல நடக்கிறது. உறுப்பினர்கள் அதைத் தவிர்த்தால்தான் இந்த அவையை அமைதியாகக் கொண்டு செலுத்த முடியும். பேசு கின்ற உறுப்பினரும் தன்னுடைய பேச்சை ஆழமாகவும்,

**பக்கங்கள் 352 முதல் 403 முடிய இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அழுத்தமாகவும் இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல முடியும். அதனுடைய பயனும் முழுமையாகக் கிடைக்கும். இது எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவரவர்களே, தங்களுடைய கருத்து முற்றிலும் ஏற்புடையது. ஆனால் எங்களுடைய குறை என்னவென்றால் எங்களுக்கென்று ஓய்வு எடுப்பதற்கு எந்த அறையும் இல்லை. இருந்த அறையையும் வேறு ஒருவர் எடுத்துச் சென்றுவிட்டார்கள். எங்கே உட்காருவது என்றே தெரியவில்லை. அனாதைகளாக, எங்கெங்கே இடம் இருக்கிறதோ அங்கேதான் உட்காருகிறோம். எனவே அதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் செய்தால் நன்றி உடையவர்களாக இருப்போம். அமைச்சர்களும், உறுப்பினர்களும்கூட கலந்துரையாடல் செய்வதற்கு பார்லிமெண்டில் உள்ளதுபோல, ஒரு சென்ட்ரல் ஹால்போல ஏற்பாடு செய்தால், அது மிகப் பயனுள்ளதாக இருக்கும். அதைத் தாங்கள் அருள்கூர்ந்து செய்யவேண்டும். அதற்குப் பிறகு இந்தக் குறை இராது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து நூற்றுக்கு நூற்றைம்பது விழுக்காடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கண்டிப்பாக அதற்கான தக்க ஏற்பாடுகளை நான் செய்வேன். உங்களுடைய முழு வாய்ப்புகளுக்கு ஏற்ப உதவி செய்வதற்காகத்தான் சட்டப் பேரவைத் தலைவர் இங்கே இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 34—நகர்ப்புற வளர்ச்சி—தொடர்ச்சி.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவரவர்களே, எனக்கு பதினைந்து நிமிடங்கள் அளித்தீர்கள். அதில் 3 நிமிடங்கள் தலையீடுகளினால் போய்விட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மூன்றையும் தள்ளுபடி செய்து விடுகிறோம். தள்ளுபடிக்குக் காரணம் இது கைத்தறித் துறை என்பதால் (சிரிப்பு).